DR U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR

# திருப்பழனிப்
# பதிற்றுப்பத்தந்தாதி.

இஃது

திரிசிரபுரம், வரகனேரி
உபாத்தியாயர்
**குழந்தைவேலுப்பிள்ளையவர்களாலும்**
ஷையார் குமாரர்
**சோமசுந்தரம்பிள்ளையவர்களாலும்**
இயற்றப்பட்டு

திரிசிரபுரம்
எஸ்-பி-ஜி-காலேஜ், தமிழ்த் தலைமைப் பண்டிதரும்,
மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்துவானுமாகிய
இலக்கண உபாத்தியாயர்
**ஆ. கா. பிச்சையிபுறாகீம் புலவர்**
அவர்களாற்றிருத்தப்பட்டு

ஷையூர், தோல்ஷாப்பு
**தி. ம. பொன்னுச்சாமி பிள்ளையவர்களால்**

திருச்சி, "பாக்கிய விலாஸ் அச்சாபீசில்"
பதிப்பிக்கப்பட்டது.

1906.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR.

சிவமயம்.

# முகவுரை.

"தவளத்தாமரைத் தாதார் கோயி
லவனைப் போற்றுதுமருந்தமிழ் குறித்தே"

சந்தனமலயப்பைந்தமிழ் முனிவரனாகிய அகத்தியனார்க்குத் தமிழறிவுறுத்திய பரமாசிரியனாகிய குமாரக்கடவுளது திருவடி மலர்க்கட்சாத்திய திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதியென்னும் இந்நூல் இற்றைக்கு நாற்பது வருடத்திற்குமுன் இத்திருச்சிராப்பள்ளி வாகனேரி மறையவர் வீதியில் சைவவேளாள குலத்திலகராய் வீற்றிருந்து பற்பல மாணாக்கருக்குத் தமிழறிவுறுத்திக் காலஞ்சென்ற ஸ்ரீ குழந்தைவேலுப்பிள்ளையவர்களால் அறுபத்தொரு செய்யுட்களாற் பாடப்பட்டுப் பனையோலைச் சுவடியிலெழுதப்பட்டிருந்தது. (இன்னும் இவர்களாற் செய்யப்பட்டு முடிந்த நூல்கள் பலவுள.) ஷையார் சகோதரர் குமாரரும் அடியேனுக்குத் தமிழாசிரியருமாகிய ஸ்ரீ அரங்கசுவாமிபிள்ளையவர்கள் அப்பனையேட்டுச் சுவடியை நோக்கி ஒரு பிரதியெழுதி எஞ்சிய முப்பத்தொன்பது செய்யுட்களையும் பாடி முடிக்கக் கருதி முயன்றவருகையில், காலஞ்சென்று சிவபரம்பொருளிடைச் சேர்ந்தனர். அப்பால் இந்நூல் முதற்பகுதியாசிரியர் குமாரரும் என்னோடு ஒரு சாலைமாணாக்கரும், தமிழ்ப்போதகாசிரியருமாகிய திருச்சிராப்பள்ளி சர்க்கார் பேட்டையில் உப்பு வியாபாரம் செய்யும் ஸ்ரீ. கு. சோமசுந்தரம் பிள்ளையவர்களை யானும் சிவநேயர் சிலரும் எஞ்சிய முப்பத்தொன்பது செய்யுட்களையும் பாடி இந்நூலை முடித்

நல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டவாறு சென்ற மூன்று வருடத்திற்கு முன் பாடி முடித்தனர். இவர் பாடிய இச்செய்யுட்கள் “செந்நெலாலாய செழுமுளை மற்றுமச்-செந்நெல்லேயாகி விளைதலாலந்நெல்-வயனிறையக் காய்க்கும் வளவயலூர-மகனறிவு தந்தையறிவு” என்ற ஆன்றோர் முதுமொழிப்படி தந்தையாரது செய்யுட்களைப்போலச் சொற்குணமும் பொருட்பொலிவும் சைவசித்தாந்தக்கருத்தமைதியும் உடையனவாய்க் காணப்பட்டிருந்தன. இந்நூலைச் சிநேயச் செல்வர்கள் கற்று, “உலகமுவப்பவலனேர்பு திரிதரு-பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்-கோவறவிமைக்குஞ் சேண்விளங்கவொளி” யாகிய சுப்பிரமணியக்கடவுளின் திருவடிமலரைச் சிந்தைசெய்து உய்யுமாறு செய்து வெளிப்படுத்தினன்.

இங்ஙனம்

தி. ம. பொன்னுச்சாமி பிள்ளை

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

திரிசிரபுரம்

எஸ்-பி-ஜி-காலேஜ்-தமிழ்த் தலைமைப் பண்டிதரும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானுமாகிய மகா-ா-ா-ஸ்ரீ
இலக்கண உபாத்தியாயர்

## ஆ. கா. பிச்சையிபுறாகிம் புலவரவர்கள்

இயற்றிய

## நிலைமண்டிலவாசிரியப்பா.

மணிநிறக்குறவ ரணில்வாற்கருந்தினை
கொய்மார்செவ்வி சொடுக்கியமருங்கிற்
பூத்தனவேங்கை யொள்வீப்பொதுளிய
சினைவயினேத்தரு ழுஞ்ஞைஞினைஇ
வான்மகளேருக்கும் வள்ளிமானென்னும்
பழனிமாமலைமிசைப் பரவியமார்பி
னிடவயின்வடிவே லினிதினேந்தி
வலக்கரமெடுத்து மலர்த்தாளிறைஞ்சுநர்
நாற்பொருள் பெறுவா னன்கினிதருளுங்
குமரவேளடிக்கட் கொள்கையிற் பலபடிப்
பலப்பலபாக்க ளலத்தகச் சார்த்த
ஜெல்கதியடைவான் ஜேட்கோப்பென்னவு
மரபுவழிப்படூஉ மக்கட்கெல்லா

மிருசுடர்வாணி னியங்குஞான்றுந்
தோற்றமுமறிவு மேற்றமுந்தரூஉ
மொருபேரெச்சமாத் தருபேறெனவுங்
கடைப்பிடித்திருந்த நடைத்திறப்பெரியோன்
செந்தமிழ்த்திறமெலாஞ் சிந்தையுட்கொண்டோன்
மீக்கூற்றொன்றைப் போக்கறநிறுவிய
குழந்தைவேற்குறிசிறொன் கொள்கையிற்கொளீஇப்
பழனிப்பதிற்றுப் பத்தந்தாதியென்
றொருபாமாலை யருமையிற்றொடுத்தமி
லறுபதிற்றொருபா வரும்பொருள் பலவமைத்
திருந்தமிழாய்ச்சி யெவர்க்குங்காட்டுபு
தற்றவப்பயனையித் தமிழ்நிலங்காணக்
கந்தழியடையக் கரந்தனனன்றே
செந்நாப்போதார் செழுமறைப்பொருட்கண்
மகனெனப் புகன்றருள் குறுவெண்பாட்டிற்
கொருகாட்டென்ன விருநிலத்தொளிர்வோன்
செந்தமிழ்ச்சலதியி னுந்துமுழுமதியென
வின்னிசைநிலாக்கதிர் மன்னுறவுறைவோ
னன்பினையன்பினர்க் களித்துவரன்பினை
யின்புறப்பெறாஉ மியல்பினிற்பெரியோன்
தமிழினைவளர்த்திய சைவக்கரும்பினை
யுண்டுசுவையறிந்திடுந் தண்டமிழாசான்
பாட்டினுந்தொகையினு மீட்டுகீழ்க்கணக்கினு
மின்னபிறவெவற்றினு நன்னருணரறிஞன்
றிருச்சிராப்பள்ளித்தன் றேமெனவிளங்கிய
நந்தகைசோம சுந்தரப்புலவன்
றந்தைதன்பணிக்குறை மூழ்ந்துறவாய்ந்து
சொற்சுவை பொருட்சுவை தொடர்ந்திவணிலவுற
முப்பதிற்றொன்பான் முடிபொருட்செய்யுட்
பாமாலையதனொடு படுத்துமுடித்திங்
கியற்றிறற்றமிழர்க் கினிப்பவருளினனே.

சிறப்புப்பாயிரம் முடிந்தது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR :: MADRAS-41

# சாத்துகவிகள்

இஃது

திரிசிரபுரம், வரகனேரி, தோல் ஷாப்பு

**தி. ம. பொன்னுச்சாமி பிள்ளையவர்கள்**

இயற்றியது.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகினிற் பலநன் னதிகளிற் சிறப்புற் றோங்கிய பொன்னி சூழ்
நாட்டிற், டலகலை பயின்று பகவன் வேள்பரனற் பலகவி பாடிய
பண்பன், றிலகமதாகுங் கங்கையங்குலத்துத் தினகரன் றீந்தமிழு
ணர்த்தெங், குலகுரு குழந்தை வேலெனுங் குரிசில் கூரயிற் குமர
வேண்மீதே.

வேறு

திருப்பழனிப் பதிற்றுப்பத் தந்தாதி யெனுநூலிற் றிருத்தமாக
விருப்பமுட னறுபானென் றேபுகன்றவ் வமருலகு மேவினான்றன்
கருப்பமுறு குமரனுஞ் சேர்மசுந் தரக்கவிஞன் கருத்தினுன்னிக்
குருப்பயனான் முப்பானென் பதுமியற்றிப் பூர்த்திசெய்தான் குணக்
[குன்றம்மா. 2

வேறு

இந்நூலை யோதினோ ரிகபரசா தனமுறுவ
ரெந்நூலு மிந்நூலுக் கிணையாமோ சொலற்கரிய
பன்னூலின் பயனடைவர் பகைதவிர்வர் பிணியடையார்
கன்றோடே யுடைக்குகன்றன் கழல் பெறுவர் கருதுமினே.

இஃது

திரிசிரபுரம் கோட்டை முனீஸ்வரஸ்வாமி கோவிற்
பாடசாலையுபாத்தியாயரும்,
இந்நூன் முதற்பகுதியாசிரியர் மாணாக்கருளொருவருமாகிய,
**நாராயணபிள்ளையவர்கள்**

இயற்றியது.

நேரிசை வெண்பா.

**கா**சினியெலாந் துதிசெய் கந்தன் பழனிமலை
மாசில்லா நீலமயில் வாகனன்மேற்—றேசுபெற
நங்குரு குழந்தைவே லையனவி லந்தாதிச்
சிங்கார மென்சொல்வேன் சீர். 1

**க**ம்பநாடன்கவியுங் காளமே கன்கவியுஞ்
சம்பிரமஞ்சேர் சங்கத் தமிழ்க்கவியுங்—கும்பமுனி
கொண்டாடுமென்றன் குருமொழியந் தாதிதனைக்
கண்டாற் பயமடையுங் காண் 2

**கட்டளைக் கலித்துறை.**

**க**ங்கை மகன்கடம் பன்கார்த்தி கேயன் கவிப்புலவன்
றிங்க ளுலவும் பழனி மலைச்சுகன் சேவடிக்கே
புங்கமிகுங் குழந் தைவேலை யன்புனைந்ததொரு
சங்கத் தமிழ்த்தொங்க லந்தாதி யென்றுந் தழைத்திடவே. 3

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR : MADRAS-41

இஃது

இந்நூற் பிற்பகுதியாசிரியர் மாணாக்கருளொருவராகிய,

திரிசிரபுரம், வீமநகர்

T. C. இராஜண்ணநாயக்கரவர்கள்

இயற்றியது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓதுமொரு சாதனைக ணன்குஞ் செய்தே யொளிர் தலைவனைக்
கண்டு தாண்டி மேலாம், போதமதை விட்ட பொறிபுலனும் விட்
ட புண்ணியர்பா னின்றிலங்கு புனிதமேய, வாதவரூ யாருயிரா யன்
பாய்ச்சுத்த வறிவறியாப் பூரணமாயகண்டவாழ்வாய்ச், சீதமதி தவ
ழ்மாடஞ் சிறந்துமேவுந் திருப்பழனி வாழ்குமரன்றிருத்தாண்மீதே 1

வேறு

நித்திலந்த ன்னண்டமென வடைகாக்கு மனப்பேடு நிறையுஞ்சு
த்த, சித்தமுள்ளோர் சூழ்ந்துறையும் வரகனகர் மிகச்சிறக்கத் திகழ்ந்த
சீர்சான், முத்தமிழின் றுறைதேர்ந்த குழந்தைவே லெனு நாம முதி
யோனீர்கு, ழித்தனையி னுவலர்க ணுவடக்க வொருநூலை யியற்ற
வெண்ணி. 2

எத்தகைய நூலுமிதற் கிணையிலையே யென்றெவரு மேத்தி வேத
புத்தகமோ வலதிரு வாசகமோ வெனமகிழ்ந்து புகலஞான
வித்தகமா ரந்தாதி பதிற்றுப்பத் தாத்தொடுத்து விளம்பினூ
லத்தகைய தனிநூலை முடிக்குமுன்ன ரவனடைந்தா னருமைச்சோதி 3

தந்தைசொன்ன வொருநூலைத் தான்முடித்துத் தருவனெனத்
தலைமைபூண்ட, விந்தவிதமகன்றந்தைக்காற்றுமெனுங் குறட்காட்டிற்
கிவனைக் கண்டாம், விந்தையெனப் பலர்சொலவத் துறைமுடித்து
விளக்கினான் வீரன் சோம, சுந்தரமென்னாசிரியன் சத்தநூல் பிறவு
ணர்ந்த தூய்மையோனே 4

நயமிருக்குங் குணமிருக்குந் திருமணத்தான் கலையிருக்கு நாவி
னான்வேற், சயமிருக்குந் திண்டோளிற் புகழிருக்க வாழ்ந்திருக்குந்
தன்மைபூத்த, மயமிருக்கு மலர்முகத்தான் சோமசுந்தரமென்னு
மகிபன் சொற்ற, சுயமிருக்கு மொழிபோல யாவரே யிவ்வுலகிற்
சொலவல்லாரே.

சாத்துகவிகள் முடிந்தன

உ

சிவமயம்.

# திருப்பழனிப் பதிற்றுப்பத்தந்தாதி.

## காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆதிப் பழனிப் பதிற்றுப்பத்தந் தாதி யெனும்பா வலங்கலை யான்
சோதிவித் துலைவச் சடைக்கணியுந் தூயோனருள்வே டணைமலர்த்தாள்
மீதிலணியப் பிரவியெனும் வேனல் கெடநல் லடியார் பாற்
கோதிலருளா மழை பொழியுங் கூனைக் குஞ்சரத்தின் பதந் தொழுவாம்

---

## நூல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவார் கருணை மதிமுகமுந் தேனூர் கமல மலர்ப்பதமு
மருவார் கடப்ப மலர்ப்புயமும் வயங்க வுளத்திற்குடிவருவாய்
கருவார் குழியிற் சனித்துழலுங் கடையேற் குன்னையலதுளரோ
தருவா ரிறைவன் மருகாவென் றுதார் பழனிமலைக்கரசே. 1

மலையுங் கடலு மெதிருறுசூர் மாவும்பதற வேல் விடுத்தோ
யலையுஞ் சனனப் பிணிதொலைப்ப ரரிதோ வந்தோ வந்தோ நன்
னிலையு முணர்வோ ருறவுமிலா நெஞ்சினேனு னென்செய்கேன்
சிலையுங் கணையும் பயில்குறமின் றுணைவா பழனிச் சிவகுருவே 2

# திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி

குருவே கருணைச் சிவஞானக் கொழுந்தே யமரர் குழாந்துதிக்கு
மருவே மலரே மணியொளியே மதியே கதியே யெனப்புறு பல்
லுருவே யருவே நலந்திகழ்மெய் யுணர்வே யுணர்வி னுட்பொருளே
தருவே பழுத்த கனிரசமே தமித்தாள் பழனிச் சயிலத்தனே. 3

சயிலப் புனச்செவ் வேனலைப்பைங் கிளிகள் சோதத் தனிக் குறமின்
கயிலன் றுறுபொற் கவண்டனிற்செம் மணிகொண் டோச்சக்
[கண்டிருந்தோ
வெயிலஞ் சிமிஞ்செஞ் சோதிவடி வேலோய்வேட னுருவானாய்
தயிலங் கமழும் பழனிமலைத் தியாகா சரணந்தருவாயே. 4

தருக்கா வலனுந் திருமாலுஞ் சதுர்மா முகனுங் காணரிய
விருக்கா தியநான் மறைமுடிமீ திருக்குந் துணைத்தா ளனுக்கருள்வோ
யுருக்கா நெஞ்சப் பெரும்பாவிக் குனையேயன்றிக் கதியுளதோ
சுருக்கா நினதன் பருள்புரியம் பழனிமலைவாழ் தூயோனே. 5

தூயா வடியா ருளங்களிக்குந் துரியா துரியா தீதபத
நேயா வமுதா சனர்க்குலகை நிலையா யளித்த நெடியோனே
மாயா மலமென் றறுமோவென் மனமாஞ் சிலைமேற் பதவனச
மோயா தென்று மலர்ந்திடுமோ புகலேர் மலைவா ழுயர்பொருளே 6

பொருளே புலன்வென் றவர்களுரை புரமே பரமா னந்தவெள்ளத்
தெருளே விசும்பார் பழனிமலைத் தேவே மடவார் தருமயலா
மருளே கொண்டிங் கலைந்தல்லான் மற்றோர் நெறியுந் திருந்துகிலே
னருளே வருமோ துன்புறுமோ வறியேன் கருணைப் பெருங்கடலே 7

கடமார் புலியுந் திரணிதியுங் கருது முறவி னர்கள்குழுவு
மடமா தர்களுங் குழறியசொல் வாய்ச்சேருமோ துணைமனமே
வடமா ரிலையிற் றுயின்முகுந்தன் மருகா முருகாவென வுருகி
யிடமார் பழனிக் கிரியானைப் பணிவாய் வினையா மிடரறவே 8

அறமா நெறியிற் புகவறியே னடியார்க் கடிமைப் படவறியே
னிறமார் பழனி மலையாயென் றுன்னை யுளத்தே நினைக்கறியேன்
குறமா மகள்பொற் குயஞ்சேருங் குமரா வமரா பதிக்கரசே
மறமா ரியமன் வரும்போதென் செய்வே னருள்பூ மலர்ப்பதமே. 9

பதமாம் பதும மலரருட்டேன் பருகியென தமனஞ் சுரும்பா
யிதமா மெனவங் கிருந்துபிறப் பென்னும் பிணியைத் தொலைத்திலனே
மதமா தங்கத் தனைக்காக்க வந்தோன் மருகா மலைக்குமரா
சதமா வில்வாழ் வினையோம்புங் கொடியேற் கருள்செய் தருணமி

## வேறு.

திருணம்வா ழில்லந் துறந்துபைங் காய்கனி சருகொடு புன லு
ண்டே, யருணம் வெம்புலி கொலைக்கரி யெண்குறை யடவிசூழ் வ
ரை நாடி, வருணம் போய் மழை வெயில் பனிக் காற்றினால் வாடு
மெய்த் தவர் கேண்மி, னிருணம் பாலனு காதுயர் பழனிவா ழெந்
தையைப் பணிவீரே. 11

பணிந்தும் பூசனை செய்துநெக் குருகிடப் பாடியு மிலையென்
றே, துணிந்து சந்நிதி முன்புரை செய்தவத் தோர்க்கரு ளேயோய்பூ,
வணிந்து நின்றாடிக் கன்பிலே னென்னமெய் யறைந்துமென் பவநோ
ய்க, டணிந்து போதலுக் கென்றடை டழனிவாழ் சாமி நீ புகல்
வாயே. 12

புகலும் வேதத்தின் முடியுறு நின் சரண் பூவடி யதன் மீதே
பகலு மல்லு மாத் தவர்கடம் மனமெனும் பாரமே யிடத்தாங்கு
மகலு ளாயென்றன் மனத்தவி சின்கண்வந் தமர்வதற் கென்பார
மிகலுஞ் சூரரைச் செற்றவா பழனியி லிலகயின் முருகோனே. 13

# திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி

முருகந் தாமரை யனநடை பயில்வன மொய் குழ லார் வாயா
லொருகந் தாவெனப்பணிதலைப் பைஞ்சுக முணர்ந்துசா ரிகையோடு
மிருகந் தாமுரு காகுழ காகுகா வென் றுரை மலைநாடா
வருகந் தாழ்வுறக் கண்டநீ யென்வினை யறநலஞ் சொல்வாயே. 14

சொல்லு மாலுழல் பிறப்பறக் கண்கணீர் சொரிந்திட வலமாம்
போற், செல்லு லாமுயர் பழனியங் கிரிவளர் தேவனே யெம்மானே,
கல்லு ளாமுயிர்க் கிரங்கிய நீகடைக் கண்கொண்டு பாராயேல், வெ
ல்லுந் தீவினைக் கென்செய்கே னென்செய்கேன் விபரமொன் றறி
யேனே. 15

அறிவ ரீகைபோற் கவிகடென் குலைகளை யலைத்துதிர் காய் மோதிச்
செறிவ ருக்கைமா வரம்பையிம் முக்கனித் தேனொடு கழைச்சாறு
நெறிவ ரும்புன லென்னவே பாய்ந்துசெந் நெல்விளை மலைநாடா
பொறிவ ருகவின் னருள்புரி சுவர்க்கமிப் புவிபுகழ் புலவோனே. 16

புலரிப் போதுநின் றண்ணதி யாடிவெண் ணீறுமெய்ம் மேற்பூசி
மலரி னாலுய ரருச்சனை செய்துநின் மந்திரந் தனையோதி
யலரி கோடிசெய் சோதிமெய்ப் பதம்பணிந் தன்புறு மடியாராம்
பலரி னுமடி யேனையுஞ் சேர்த்தருள் பழனியம் மலையானே. 17

மலைக்குஞ் சூர்க்கும் புணரிக்கும் வேல்விட்ட வல்லனே யெனை
நாடி, யலைக்குந் தீவினைக் கென்செய்கேன் சொல்லும்வே தாகம மெ
னுமேலாங், கலைக்கு மாலிற்கும் விதிக்குமெட் டாதன்பர் காணுநற்
சுயஞ்சோதி, நிலைக்கும் பாதசரோருக மருள்பழ னிமலைவாழ் நே
யோனே. 18

நேய மாக்கனி பரித்திடு மரிகளை நீள்கொடிச் சியரோச்சுந்
தூய மாக்கதிர் மணிவிண்மீன் வீழ்பெருஞ் சோதிசெய் மலைநாடா
மாய மாக்கவு மிமைக்குமு னீக்கவும் வல்லனீ யலையோநான்
றீய மாக்கள்போ லலைதலை யின்றுமென் றேவனே மறந்தாயோ. 19

# திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி.

**ம**றந் திறந்தவர்க் குயிர்வரு மோவென வையகஞ் சொல்லக்கே
ட்டு, மிறந் திறந்தவர் படைத்ததுன் பஞ்சொல வெண்ணிலையென
த்தேர்ந்தும், அறந் திருந்துபூம் பழனிய மலைவள னையனை மறை
மேலாச், சிறந் திருந்தரு டாளனைப் பணிந்திலை செய்வதென் றோ
மனமே. 20

வேறு.

**ம**னமிருந்து நாடாம லுன்னையென் றும் வாயிருந்தும் பாடாமன்
மதிவல்லோர்க, ளினமிருந்துங் கூடாது வெறிநாய் போலே யின்ற
லைந்தேனென்செய்கே னந்தோ வந்தோ, தனமிருந்து முற்றவரெ
ண் கோடிகோடி தாமிருந்து மியமன்வரிற் சரணஞ்செய்தோர், தி
னமிருந்து வருகவென்றால் விடுவதுண்டோ தேவனே பழனிமலைத்
திறல்வேலோனே. 21

**வே**லாட மயிலாடச் சிலம்பிறைசை மேலாட ரவிகோடி மே
வுந்தண்டைக், காலாட நீயாடி வருதலென்றோ கன்மமென்னை விட்
டோடுங்காலமென்றோ, மாலாடக் குறமாது தோள்சேரின்ப வங்
கணனே யம்பரனே மறையோர் நான்கின், மேலாடச் சிவகுருவே
சித்தர்கோடி மேவுபழ னிக்கிரிவாழ் வேடர் கோவே. 22

**கோ**வேநீ யறியாத தொன்றுமில்லை குற்றநான் செய்யாதிங்
கொன்றுமில்லை, பூவேனு மிலையேனும் பறித்துன் பாத பூசைசெய்
யக் கனவினிலும் பொருந்தாதேற்குத், தாவேது நிலையேது சுகமங்
கேதுன் றண்ணருளியே யில்லாவா தரமங்கேது, தேவேதே வரசன்ம
கிழ் மருகாவானோர் சீர்பழனி மால்வரைவாழ் திறல்வல்லோனே. 23

**வ**ல்லாரு மூலைமடவார் மருட்பார்வைக்கு மாமதியா முகத்திற்கு
நகைக்குமேலா, மல்லாரு நெறிகுழலின் கந்தத்திற்கு மன்னநடை
க்கும்மயிலின் சாயலிற்குஞ், சொல்லாருங் கனியிரசந் தனக்குமா
சை சுற்றிநிறை சேற்றுமத்தி போலேயானே, னெல்லாரும் பழனி
மலைக் கரசேசித்த மெய்ப்படியோ வறியாத வேழை நானே. 24

## திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி.

நானென்ற வாணவத்தை நாசமாக்கி நாடியமூ லாதாரக் கன
லைமூட்டித், தானென்ற மதியமிர்த முண்டுகோடி தரணியொளிர்
வட்டநடுக் கோட்டைக்குள்ளே, ஊனென்ற பொய்யைமறந் துன்
னைக்கண்டங் கொன்றுபட்டு நிற்றலெனக் குண்டோ வந்தோ, மா
னென்ற நோக்கவள்ளி மாதைச்சேரும் வங்கணனே தென்பழனி
மலைவாழ் வோனே. 25

மலையோவித் தேகமது தாளுறலும் வாரிதியேழ் சூழுலகும் வா
னாடு, நிலையோவல் லதுகிழமாம் பருவமென்ற நீடியநா ளுண்டே
னிற்சன் டனுக்கே யிவ்வூர், தொலையோநம் பாழ்மனனே யிது
வோமேதை சொல்லரிய சென்னிவரை மத்தியேறிக், கலையோடா
மற்பிடித்தங் கதிலேகட்டிக் கனல்கொளுத்தப் பழனியனைக் காணு
ம்பாரே. 26

பாரேழு பிறவியினுஞ் சிக்கிவாடிப் பசிபிணிபா லேயலைந்தேன்
மேல்கீழாக, வீரேழு பதினலா முலகும்போற்று மெந்தையே நின்
னடிக்கா ளென்றுவேனோ, காரேழுஞ் சூழ்பழனி மலைமேல்வாழுங்
காரணனே யடியர்மனக் கண்ணிறைந்தோடிங், கோரேழு பதியிறையே
யுன்னையன்றி யோருதவி யுங்காணே னொப்பிலானே. 27

ஒப்பில்லா நின்புகழைப் பாடிப்பாடி யூற்றெடுத்தா னந்தவெ
ள்ளம் பருகாதென்றுந், துப்பில்லாக் கயவர்தமைத் தேனுவென்றுஞ்
சோமனென்றுங் காமனென்றுஞ் சொல்லிக்கஞ்சிக், குப்பில்லா மற்
றிரிந்த தொன்றேயல்லா துண்மையொன்றுங் கண்டறியே னொருகா
லத்துந், தப்பில்லா மெய்யடியார் பாடியாடுந் தண்டலைசூழ் பழனி
மலைத் தனிவேலோனே. 28

தனியிருந்து பாய்மாவை யுள்ளேகட்டித் தள்ளாது கோபுரவா
யிலிலேதூங்கு, மினியமணி நாவதனை மேலேயேற்றி யிட்டபூர
ணமதியி னுள்ளேசென்று, புனிதமிகு முக்கோண வீட்டினுள்ளே
பொங்கியவா னந்தமயப் பாலையுண்டு, தொனிவிளங்க வொளியில
ங்க நின்னைக்கண்டு தொழுவதென்றோ பழனிமலைச் சோதியானே. 29

# திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி.

சோதிமய மேஞான நிலையே வேதச் சுருதி முடிவேயருள்
கொ ணலமே தூய, நீதிநெறியே யுணர்வுக் குணர்வே யன்பர் நெஞ்
சிடமார் பேரின்பக் கடலேயென்று, மாதிமுத லேயசர சரமே சொ
ல்லு மண்டபகி ரண்டமே யென்னையாளக், கோதில்பழ னிக்கிரி
வாழ் தேவே நெஞ்சுட் கும்பிட்டே னின்னடிக்கே யன்பிட்டே
னே. 30

வேறு.

அன்பின் வழி கசிந்து கண்ணீ ரருவியதி லேயாடி
முன்பினறி யாது சொன்ன மொழிகுழறி மெய்விதிர்த்தே
யென்பிளகியின்பவெள்ளத் தென்றனையுங் கூட்டுவையோ
தென்பழனி மால்வரை வாழ் சித்திரமயிற் சேவகனே. 31

சேவகம்வே றின்றியுன்னைச் சிந்தைசெய்து கைகுவித்து
நாவகத்தும் பாவகத்து நாடியவா றக்கரத்தும்
பாவகன்ம நீங்கமிகு பத்திசெய்வதெந்நாளோ
பூவகத்தான் வந்துபணி பொற்பழனி நாட்டானே. 32

நாட்டமற்றங் கப்பாலா நின்றவுன்னை யானவிலக்
காட்டமனக்கண்ணடக்கக் கொள்ளாதாமென் றுணர்ந்தும்
பாட்டகத்துக்கூறவொரு பக்கமுமன் றுறுனுங்
கேட்டதரு டென்பழனி யால்வரைவாழ் கேகயனே. 33

கயல்படும் பொற் கண் மடவார் கால்வடியிட் டாட்வஞ்சி
யயல்படும்பைப் பன்ன கங்கண் மஞ்ஞையெனக் கண்டடங்கும்
புயல்படிந்தண் சோலைமலைப் பொற்பழனி வேலோயென்
செயல்படும்பா டென்சொல்கே ளீயினிது செய்வாயே 34

# திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி.

செந்துவர் வாய்க் கொடிச்சியர் கைத் தேமாவைத் தேவர் கண்டு
வந்தமிர்த மீய்ந்தளந்து வாங்குமலை நாட்டரசே
சந்தமயி லேறியிரு தையலர்கள் வீற்றிருக்க
வெந்தமுள மீதுகுடி யின்றிருக்க லாகாதோ 35

இருக்காதி நான்மறைநூல் காணரிதா மென்றாலுந்
தருக்கா வலன் மருகா வன்பரிடஞ் சார்ந்தனை நீ
யுருக்காத வென்னெஞ் சிலொன்றுபட்டு வாழ்கவென்றே
மருக்காசூழ் தெண்பழனி மால்வரைவாழ் வல்லானே 36

வல்லாரி னுன்னையன்றிப் பேசிடவும் வாய்மையில்லை
யில்லாரி லென்றனைப்போல் மற்றொருவ ரெங்குமில்லை
கல்லாரி லோபியரிற் காமுகரிற் சேராது
நல்லாரிற் சேர்த்தருள்செய் தென்பழனி நாயகனே. 37

நாயகனே யைந்தொழிலு நீ வகுத்து நாட்டியதா
லாயமு நீ யுள்ளானீ மற்றிவனார் பெற்றசிறு
சேயனந்தங் கோடிபிழை செய்தாலுநன்குசெய
றுயர்கட னாமலவோ தென்பழனிச் சண்முகனே. 38

முகநேயங் கொண்டாடி முற்றுநிறை வஞ்சகஞ்செய்
யகநேய மில்லாத பாவியர்பாற் சென்றலுத்தேன்
சகநேய மில்லார்க்குப் பேரின்ப சாகரமாஞ்
சுகநேய முண்டாமோ தென்பழனிச் சுந்தரனே 39

சுந்தரஞ்சேர் மாதர்துதி சொல்லிவரச் சாரலிடங்
கந்தரஞ்சேர் சோலைபரி மஞ்ஞைகுயில் கண்டடங்கு
மந்தரமா ரம்பழனி மால்வரைவா ழற்புதனே
யெந்தா நீ கண்டருள்செ யேழை நல்ல வேளையிதே. 40

வேறு.

நல்வேலை யீதெனவந் தமரர் சொல்லு முறைகேட்டு நாடிவந்த
வில்வேலைச் சினந்தெரித்த பெருமானுக் குண்மைதனை விளங்கச்செய்
தோ, யல்வேலைக் கிரவியென வென்னுளத்திற் குடிவருதற் காகா
தென்றோ, மல்வேழ முகத்தானைச்செற்ற கரி முகன்பினவா மலைவா
ழ்வோனே. 41

மலைவாரச் சுனைவெள்ளப் பெருவாளை தாவிமக வான்றன்றோட்டி
னிலையிரைந் தருவைமுறிந் துயர்மீனைச் சினஞ்செய்பழ னியில்வா
ழ்வோனே, தொலையாவெம் பிறவி விடாய்க் குன்னருட்பிர வாகவெ
ள்ளந் தோன்றலென்றோ, கலையாயும் புலவர்பணி மெய்ப்புலவனே
யெளிதிற் காணத்தானே. 42

தானேதா னாயிருந்தைம் பூதம்வகுத் ததிலசர சரமுண்டாக்கி,
யூனேயும் பல்வடிவினுள்ளுயிரா யதற்குணவா யுணர்வாய் நின்றோய்,
நானேது மில்லாத வெனைப்பிரித்து வெளிவிடுத னன்றோவென்றும்
வானேயும் பழனிமலைக் குமரகுரு பரமுருக வடிவேலோனே. 43

வடிவாருங் குறமாது மலர்க்கரத்தின் பிண்டிதனை வாங்கியுண்டு
மடிவாடி யெனவழைத்தி ரன்னமிடக் கன்னமிட லாமோ வேத
முடிவாருஞ் சிவகுருவே தென்பழனி மால்வரைவாழ் முன்னோய் து
ன்பம், விடிவாகு நாளுளவோ வில்லையோ நாட்செலுமோ வேடர்
கோவே. 44

வேடர்மா பினில் வளரும் பூங்கொடியைத் தண்ணமுதை விரு
ம்பியே வெங், காடதனி னடந்தமலர்த் துணைச்சரணெ னுளம் வர
த்த காதோ துத்தி, யாடரவப் பணியரசு ராசையெனுங் கொடிப
டரைந் தருவேயுன் சீர், பாட மனங் குவிந்து சிரம் பணியவருதெ
ன்பழனிப்பதி வேலோனே. 45

பதியாவென் மனதுனையே பத்திசெய்ய வாய்பாடப் பகலுமல்லுந்
துதியார்ச் செவிகேட்கக் கரங்குவியச் சிரம்பணியத் தோகையேறி
மதியாரு நுதல்வள்ளி குஞ்சரிமாதொடும் விழிகண் மகிழ்ந்துகாண்கத்
ததியாகுமின்றருள் செய் தென்பழனி யூர்வளர்தண் சயிலத்தானே 46

தண்ணருமலர்க்கொன்றை முடிப்பெருமான் சிலையெறிந்தோ
ன் றனக்குமேலாம், விண்ணரா வுலகறியுப் பிரம்புகைக் கொண் ட
டித்தவர்க்கும் வீடுதந்தான், பண்ணரு ரளிபாடும் பூம்பொழில்சூழ்
தென்பழனிப் பதிவாழ் வோபென், னெண்ணரு வினையறநீ யரு
ளாதென் வண்ணமயி லேறுந்தேவே. 47

தேடுமெட்டுந் தேடி நலஞ் செய்யாத லோபியர் பாற் றினமுஞ்செ
ன்று, பாடுமெட்டும் பாடி வெளிப் படலடைத்தே கென்றபழங் கதை
க்குளானேன், கோடுதொட்டு முரித்துமக மேருவினி லெழுதியகு
ஞ் சரன் பின்வந்தோய், வாடுமிட்ட பயிர்க்கியமா னீர்சொரித லுண்
டு கண்டாய் மலைவாழ்வோனே. 48

மலமீரிக் கசிந்தொழுகும் பீறலையுண் ணிணத்தைதுரு வாசக் கூ
ட்டைச், சலமூத்தி ரக்கேணி தனையிரத்தஞ் சீநிறைந்த சண்டாளத்
தைப், பலபூத்த புழுக்குழியைத் தசைகரம்பென் பாற் பொதிந்த பா
ண்டந்தன்னை, நலம் வீற்ற தென நம்பி யுழல்வேனோ தென்பழனி
நாடுள்ளானே. 49

நாடியகர் னயங்கரங்கு புகைத்திரள்விண் ணெறிந்தசிலை நம
ன்செய்வேட்டை, யாடியதிற் றேன்றுமுரு புற்புதயின் மினிககன
த்தடர்ந்து தோன்றி, யோடிய சென் மின்றுபம்பரங்காற் றடை
திருத்திக் கொப்பாந்தேக, நீடியதென் றேம்பியுழல் கின்றேற்கின்
னருள்பழனி நேயத்தானே. 50

## வேறு.

நேயம்போ னகைத்து மதிமுகங்காட்டி நிமிர்குயத் தூசினைவிலக்கிச், சாயன்மா மயில்போ லனமெனநடந்துன் றண்ணருடோலைக்குமா தரையே, தூயபா லமுதஞ் சீனிமுக் கனியாஞ் சொல்லினரெனச்சொலி யலைந்தேன், மாயன்மாமருகா வருள்புரிபழனி மாமலைவளர்சுடர்க் கொழுந்தே. 51

சுடர்விரி தாளக் கோவைகளிலங்குந் துணைமுலை யார்துகிற்சோர்வை, யடலெனக்கருதிப் பார்வைசெய்துழலு மசடனைக் காப்பதுங்கடனு, மடல்செறிகமலப் போதுறைநறவ மாந்தியவண்டிசைபாடப், படம்விரித்தரவ மாடல்செய்பழனிப் பதியில்வாழ்கருணையம் பரனே 52

அம்பரந்தனிற்கால் கொண்டறுபடம யஞ்சிறையிழந்தபுன்னிலமாய், வம்பவிழ்கலவை யணிமுலைமடவார் மாமயல் கொண்டுழன்றலைந்தேற், கும்பர்கள்கோவே யெம்பெருமானே வுன்னருள்கிடைக்குமா றுளவோ, நம்பரனேமா வங்கணர்க்கருள்செய் நாதனே பழனி நாயகனே. 53

நானெனவருமா ணவமொடுமூன்று நாசஞ்செய் தன்னருணிறம்பிச், தானெனவான பெருஞ்சுவையருந்துந் தன்னடியாரொடுகூடிக், கோனெனவரிய வானெனப்பாடிக் கொள்ளுநா ளுள்ளதோவிலதோ, பானெனவொளிசெ யயிற்கரத்தோனே பழனியம் பதிவளர்வோனே 54

வளர்ந்ததீவினையோ விலக்கிலையிவனுன் வந்துசெய் ததமிலக்கிலையா, முளந்தனிறுடிக் கசிந்துனைப்பாடு முள்ளமெவ் வளவெனுமிலையா, றளந்தனினிறைந்த சூரரைக்கடிந்த தாணுவேயானவர் விருந்தே, வளந்தருமுயர்ந்த பழனியம்பதிவாழ் வள்ளலே கருணையம்பரனே 55

கருணையின்வடிவே யினியதெள்ளமுதே கனிந்தமுக் கனியுகு நறவே, சரணமென்றடைந்தோ ரிதையசெங்கமலந் தன்னிலூறிய பசுந்தேனே, யருணனெண்கோடி யொளிசெயும்வடிவே லாயுதனே சரவணனே, தருணமின் றெனையாள் பழனியம்பதிவாழ் சண்முகா சிவதவப் பொருளே. 56

தவத்தினர்திருவே முனிக்கருள் குருவே சதுர்மறை புகலரும் பொருளே, நவத்தினிலுயர்வே கருணையங்கடலே நலந்திகழ் புதிய தெள்ளமுதே, கவத்தினிலீபோன் மனந்தடுமாறிக் கதறியும் பொறிகளுஞ் சிதறிப், பவத்தினிலலையத் தக்கதோ கடைக்கண் பார்பழனித்திருத்தேவே. 57

தேவர்கடேவே குறமகள்கோவே சிந்தையிலேனையர் தமையே, பாவனைபுரியே னுவலைத்தொடுக்கேன் பணிந்திடத் துணிந்து சம்மதியே, னுவல்செய்துனக்கே திரிவிதகரண மடிமையுற்றிடவெனக் கொண்டேன், காவலன்மருகா பழனியங்கிரிவாழ் கந்தனே யெந்தயாபரனே. 58

எந்தையுநீயே யன்பனைநீயே யின்னருட்குரவனுநீயே
பந்தமுநீயே மோக்கமுநீயே பகர்மறையுட்பொருணீயே
யந்தமுநீயே நல்லிடைநீயே யாதியுமானதுநீயே
மந்தரபுயனே பழனியங்கிரிவாழ் வள்ளலே மாசிலாமணியே. 59

மாசிலாமணியை யருட்பெருங்கடலை வானவர்சிறைதவிர் திறலைப், பேசிடாப்பொருளை மனத்தினுள்ளொளியைப் பெருந்தனிமுழுமுதலை, யாசிலாவள்ளிக் கொடிபடர்தருவை யடிநடு முடிவிலாததுவை, நேசியாதலைந்தே னென்செய்வாய்பழனி நிருத்தனைத் துதிசெய்நன் மனமே. 60

வேறு.

ஆதிசெய் நல்லடி யாரடிப் பொடிசிரஞ் சூடிக்
கதிசெ யம்பழ னுபுரி யான்கழல் கருதி
விதிசெ யும்பிறப் பிறப்பெனு மிரண்டையும் விலக்கு
ததிசெய் நன்மன னோகதி வேறில்லைத் தானே 61

தானை நால்வகைப் புரவல ரெனினுமித் தரையின்
மேனை மீன்றரு முமையருள் பழனிவேல வனுங்
சேரனை யேத்தில ரிரவல ரேயெனக் கூறி
வேலனை யோர்பய னெங்ஙன மடைகுவ ரியம்பே 62

இயம்பி டாதநின் பெருமையை மடவரற்கிரங்கிக்
குயம்பங்கேர் விழிகயல்மொழி பாவெனக்கூறிப்
பயம் படாதுழல் பாவியேற்கருள்வதுன்பார
மியம் பல்லாயிர முழங்குநற் பழனிவாழிறையே 63

இறைவனே மலர்மகளிறை யயனோடிரண்டு
மறைவலோர்களும் பணியுமெய்ஞ்ஞான வாரிதியே
நறைவழிந்து பாய்பண்ணை சூழ்பழனி நாதாவென்
றறைவதேயலாற் பிறமொழி பகர்ந்தறியேனே. 64

ஏனமாய்விர் சிறையனுமாயிரு நிலம்வான்
போனமாலயனறிதராச்சிவ னும்பொருளுக்
கீனமேல கம்பழனி மாமலை வளரெந்தாய்
ஞானமணிநிலைதனை யடைந்தொளிர் வதெந்நாளோ 65

நாதனேயார் செயல்புரிந்திடுக்க ணொலிந்த
னீதவாறிழிந் துழல் மனந்தனை நினைத்திடநின்
பாததாமரை யென்னகத்திலங்கிடப் பணிப்பாய்.
சூதமாங்கனிகொண்ட நற்பழனி வாழ்சுடரே. 66

சுடரோர் மூன்றினுக் குயர்வுடை நின்னருட்சோதிக்
கடருமாநிலத் தெப்பொருணிகரறைகுவனால்
படருமெய்ப்புகழ்ப் பழனிமாமலைவளர் பரனே
தொடரும் வெவ்வினை தொலைந்தருணின்பதத்துகளே. 67

திரிதமாக நின்புகழ் சொலத்தோன்றிடுங்காலை
விரியுமெய்யறி வொளிர்ந்திடாதழுத்தும்வெம்மாயை
யிரியுமாசெயல் நினக்கொருபாரமோ விணங்கிக்
கரியுமாளியு முலவுநற்பழனிவாழ் கந்தா. 68

கந்தநாதவென்றொருமுறை பகர்ந்திடிற்காலன்
சிந்தையானது கலங்கியே குவனெனத் தேர்ந்தும்
பந்தமாயையினீங்கிலே னின்னருட்பார்வை
வந்துமேவிடிலுய்குவேன் பழனியின் வாழ்வே. 69

வாருலாமுரசதிர்ப்ப வானவர் புடைசூழத்
தேருலாவகின்ற சூரரைக் காய்ந்த நீ சிறிதுஞ்
சேருறுப்பவந் தொலைப்பது பாரமோ திசபூங்
காருலாவுநற் பழனிவாழ் கடம்பணிமார்ப 70

வேறு.

மாரனென்ன வயங்குமெழிலுளீர்
நீரமேவு வையாபுரி சென்றுநின்
பேரெலாம் புகன்றிடும் பெருமையெவ்
வூரிலுண்டு பழனிக்குநயனே. 71

உதயங்கண்ட மலரெனவென்னுள
நிதமகிழ்ந்திட நின்னருளீகுவாய்,
மதமிகுந்தவெம் மாயையொழிந்தவ
ரிதயமேவும் பழனியிலீசனே, 72

ஈசனே பழனுபுரியிற் பிர
காசனே யடியார் கண்களித்திடு
நேசனேயென நின்புகழை நிதம்
பேசவாக்கருள் யிஞ்ஞுகன் பிள்ளையே. 73

பிள்ளையின்றி வருந்திற் பிறர்புரி
சள்ளையொன்றித் தவிக்கிற் சலனம்வே
றுள்ளமொன்றி யுழலிற் பழனிவாழ்
வள்ளற்போற்றுவர் வையகமாக்களே 74

மாசளிக்கும் வளர்த்த பழனியி
னீகளித்து விளங்கிணை யன்னறார்
தேசமுற்றும் பயனென் சிறந்தொளிர்
நாசமுற்றவர்போற்று மெய்ஞ்ஞானமே 75

ஞானமின்றி நலமிழந்தார்மனம்
போனவாறுவிடயம் புகுவரே
ஆனமில் பழனிப்பெருமான் பதக்
கானுலாமலர் காண்பதெக்காலமே. 76

காலமென்செயுங் காலனுமென்செயுங்
கோலமாநவக் கோள்களுமென்செயு
மாலமார் மிடற்றண்ணலளித்தருள்
சீலனூர் பழனிப்பெயர் செப்பினே 77

செப்புநேர்முலைத்தே மொழியார்மனை
மொப்பக்கூடு மமையத்து முன்புகழ்
செப்பிக்கூடுவரென்னிற்றினந்தினஞ்
செப்பிலாதவரார் மலைத்தேத்தினே. 78

தேக்குமன்பர் தினந்தொழுங்கமலை
தாக்குந்தண்டிரை யார்ப்பைத் தகர்க்குமால்
காக்கக் கங்கணங் கட்டிய கந்தன்வா
ழாக்கமார் பழனிப்பதியண்டியே. 79

அண்டர்நாயகன் போற்றுமறுமுகன்
றொண்டர்நாயகன் சொல்லற்கரும்புகழ்
கொண்டயானை குறத்திக்கு நாயகன்
விண்டுபோற்றும் பழனியின் வேலனே. 80

வேறு.

வேலையின்மாவுரு வெடுத்த சூருட
லாலையிற்கரும்பென வீர்த்த வண்ணலே
பாலையைநிகர்பவம் பறித்துக் காத்தருண்
மாலையாக்கடம்பணி பழனி மன்னவா. 81

மன்னவொண்பொழிலிடை வதியும் வண்டின
நின்னருட்புகழிசை நிறுவிப்பாடிடத்
தன்னினின்றுமெந் தோகையேறிவந்
தின்னலைத் தவிர்த்தருள் பழனியேந்தலே. 82

ஏற்றுறுபரமனீ யெழில்கொள் விண்டுநீ
சாற்றுமந்தணனுநீ தரணியம்பழல்
காற்றுவானீயிவண் கலக்குமாவிநீ
போற்றுமெய்ப் புகழுடைப் பழனிப் புண்ணியா. 83

புண்ணியமினைத்தெனப் பொருந்திடாதர
ரெண்ணிய விடமலைத் திளைப்பவெய்த்தவர்
பண்ணியல் செழிக்குநற் பழனியங்கிரி
கண்ணியன் பொடுதுதி நவின்று வாழ்வரே 84

வாழ்ந்திடுநாளை நின்வணக்கமின்றியே
தாழ்ந்திடுகாலையிற் சாற்றுவோர் குழூஉச்
சூழ்ந்திடாதுன்புகழ் தினமுஞ் சொல்பவர்ச்
சூழ்ந்திடப்பணித்தருள் பழனித் தோன்றலே 85

தோத்திரம் புரியு நின்றொண்டர் மாட்டுறுங்
காத்திரக்கவலையுங் கடியுமெய்த்தொழி
லேத்துநின்பாலுளதாக வென்குறை
தீர்த்தருளாய்தென் பழனித்தெய்வமே. 86

தெய்வமாலேழ்வலி சிதைக்குஞ்சேவடி
செய்வருங் கரும்பனை யடக்குஞ்சீரயில்
சைவமாம் பழனியை நினைக்கிற் சந்தத
முய்வரென்றுரைத்தனர் பெரியருண்மையே 87

உண்மைநின்னடியவர் வீட்டினோங்குதல்
தண்மலர் விரிந்திழி மது பொன்றுதிறற்
றிண்மையதாம் பொழிற் பழனி சேரிரு
கண்மணி நிகர்த்திடு கார்த்திகேயனே 88

கேகய முதலிய தேயங் கிட்டினுஞ்
சோக மார்ப்பிடி நினைத்தொடர்ந்து சுற்றினுந்
தோகையில் வருமொரு பழனிச் சோதியை
வாகையம் மார்பனை வாழ்த்து நெஞ்சமே. 89

நெஞ்சுறப் பழனிவாழ் நிமலற்போற்றுவோர்
கொஞ்சுநன்மகவொடு கொழிக்குஞ் செல்வமு
மெஞ்சலிலாயுளு மிணையில் கீர்த்தியு
மஞ்சுறுவலிமையு மடைவரென்பவே. 90

## வேறு.

என்பொடக்கர வம்புனை யீரவெண்பிறை யோனுள
மின்புமுற்றிட மேல்விழுந் திச்சைபோல்வினை யாடுநீ
யன்பனன்மக வடைவதற் கருடாரதென் ஞாயமோ
யின்புரைத்திரு வடிவினோர் மேவுபழனியின் வேந்தனே. 91

வேயையொத்த புயத்தினர் வீரவேல்விழி கண்டளி
தூயநீல மெனச்சுழல் தோற்றமல்லி யறிந்தெதிர்
வாயினாற்சொலி யேசல்போல் வண்டிசைக்க மலர்ந்தொளிர்
மேயவாவி மிகச்செறி பழனிவாழும் விளக்கமே. 92

விண்ணகத்தவர்மீண்டு மிவ்வேலை சூழ் புவியெய்துவர்
மண்ணகத்தி லுயர்ந்ததோர் பழனியானை மனத்திடை
யெண்ணன்முற்றிய மானிடரெய்திடார் சருவானதி
லண்ணல்பொற்றிருவடி தனிலாற்றலோடுறைவாரரோ. 93

வாதபித்தமோடையமே வந்துமோதிடுமாகமா
மீதனித்தியமென்றெணு தின்னுமேகசைகொண்டவெ
னேசமுற்ற மனந்தெளி வெய்துமாறு டணித்திருண்
மாதவத்தர் நெருங்கிவாழ் பழனியந்தலவாசனே. 94

வாசவன்றிருமருகனே வள்ளியானைமணாளனே
யீசனீன்றகுமாரனே யென்றுநின்று துதித்திடுந்
தாசர்மேவிடு நல்லவை சார்ந்து நின்புகழ் யானுமே
பேசநீயருள் புரிகுவாய் பழனிவாழ் பிரதாபனே. 95

பன்னகக்கொருபாரமாம் பாரினுற்றவொன்றனை
நின்னடிக்குயர்துதிசொலு நேயரோ டுறவானவ
னென்ன நித்த முரைத்திடற்கென்று நின்னருளெய்துமோ
பன்னகத்தினுமேலதாம் பழனிமேவிய பாதனே 96

பாதுகாப்பது நின்றொழில் பாடியாடுவதென்றொழி
றீதுபோக்குவதுன்கடன் சேவைசெய்குவதென்கட
னீதுசத்தியமாதலா லெய்துநின்னருளென்னிடந்
தாதுகுக்கு மலர்ப்பொழிற் பழனிமேவு தயாபரா 97

தீயறிந்து களிற்றுருடந்து காப்பவனீயலான்
மதியெழுந்திட வொலிகடன் மாநிலந்தனிலாருளார்
சுதியறிந்திசைபாடு பொற்றொடியரோங்கிய பழனிவாழ்
நதியணிந்திடுசெஞ்சடை நாதனீந்தருளெந்தையே 98

எந்தைபோற்றிய யிற்கரத்திறைவ போற்றியெனக்கரு
டந்தபண்ணவ போற்றிவேதாகமத் தலைநின்றிடு
சுந்தரத்திருவடிவமார் சுதனேபோற்றி துதிக்குமென்
சிந்தைமேவிய பழனிவாழ் தேவநின்னடி போற்றியே. 99

போற்றுவார் சிலருவகையே பொங்கியக் கரமாறையுஞ்
சாற்றுவார் சிலர் பல்வகைத்தார் தொடுத்து வியப்புற
நாற்றுவார் சிலர் வெம்பவனைந்தசெதென்று மனந்தனைத்
தேற்றுவார் சிலர் பழனிவாழ் தேவதேவநின்றிருமுனே. 100

திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி முற்றுப்பெற்றது